மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–40

(ஆ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1949–ல் இருந்த சட்டத்தை நீக்கி, 1960 ஆம் ஆண்டு வாடகைதாரர்களைப் பாதுகாப்பதற்காக வாடகைக்

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2018 ஜூலை 9] [திரு. கு. பிச்சாண்டி]

கட்டுப்பாடு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றைக்கு கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவுனுடைய நோக்கம் வாடகைக்குக் குடியிருப்பவர்களை எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றிவிடலாம் என்கிற வகையிலே இருக்கிறது. நீதிமன்றத்தின்மூலம் வழக்கு தொடுக்கலாம் என்ற நிலை மாறி, ஒரு R.D.O.–க்கு அதிகாரம் வழங்குவதன் காரணமாக வாடகைதாரர்களை எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற ஆட்சி Corporate Companies–காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறதோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், வாடகைதாரர்கள் நலனைப் பார்க்காமல், நில உடைமையாளர்கள் நினைத்தால் அவர்களை வெளியேற்றலாம் என்ற வகையில் இந்த Rent Control Bill–ஐக் கொண்டுவருவது தவறு. முன்பெல்லாம் 11 மாதங்கள் வரை பதிவு செய்ய வேண்டியதில்லை. ஆனால், இப்போது யாராக இருந்தாலும் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும். R.D.O. நினைத்தால் அதிகாரிகளை வைத்து வாடகைதாரர்களைக் காலி செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. ஏற்கெனவே பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் நிறைவேற்றினீர்கள். அதில், நீதிமன்றத்திற்குப் போகாமல் R.D.O. level–ல் அதையெல்லாம் முடிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால், இன்று வரை அது pending–ல் இருக்கிறது. அதிகாரிகளுக்கு இருக்கிற வேலையில் அந்த பிறப்பு இறப்புச் சான்றுகளை அவர்களிடமிருந்து வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. இதையும் மீண்டும் R.D.O. level–ல் கொடுத்தால், அந்த வீட்டு உரிமையாளர்களுக்கு வேண்டியபடி தவறாக வீடுகளை காலி செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்படும். ஆகவே, இது ஏழையெளிய மக்களுக்கு வாடகை வீட்டிலே குடியிருப்பவர்களுக்கு பெரிய மன உளைச்சலை உண்டாக்கும். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

ஏற்கெனவே, இப்போது பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தினால் நீதிமன்றத்தில் இளம் வழக்கறிஞர்களுக்கெல்லாம் வழக்குகள் இல்லாத ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதையும் நீங்கள் R.D.O. level–ல் கொண்டுபோனால், நீதிமன்றத்தின் control–லிலிருந்து போய்விடும். ஆகவே, இது நீதிமன்றத்தின் அதிகாரத்திலே இருக்க வேண்டும் என்பதை கூறி, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டமுன்வடிவை கடுமையாக எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 19 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 19 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 20, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, for Clause Number "19" against the marginal heading "Substitution of First Schedule", substitute as Clause Number "20"."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 20, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2018) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–45

(இ) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் (குறுக்கீடு) யார், பேசுகிறீர்கள்? திரு. ரகுபதி. கையைத் தூக்குங்கள். இரண்டு Bills–களிலும் பேசிவிடுகிறீர்களா? இந்தச் சட்டமுன்வடிவைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு

@ 9–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.